1968 ஆகஸ்ட் 22]

Wild life sanctuary

*96 Q.—Thiru E. M. NATARAJAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any scheme under consideration to establish a wild life sanctuary in the forests in Burgur hill areas of Bhavani taluk in Coimbatore district?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை.

தஞ்சை மாவட்ட அரிசன நலப்பள்ளி ஆசிரியர்கள்

*97 வினு.—**திரு. கே. இரா. ஞானசம்பந்தன் :** மாண்புமிகு தாழ்த்தப்பட்டோர் நல, செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்திலுள்ள அரிசன நலப்பள்ளிகளில் பணி புரியும் ஆசிரியர்களை எவ்விதக் காரணமுமின்றி மாவட்டம் பூராவும் அடிக்கடி மாற்றம் செய்வதை தடுத்து நிறுத்த உடனடி நிர்வாக உத்தரவு அரசாங்கம் பிறப்பிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை. நிர்வாக வசதிக்காகவும், தகுந்த காரணங்களை முன்னிட்டும் இக்கல்வியாண்டில் ஒரு சிலர் மாற்றப்பட்டனர் என்று தஞ்சாவூர் கலெக்டர் அறிவித்துள்ளார்.

திரு. கே. இரா. ஞானசம்பந்தன் : தலைவர் அவர்களே, பஞ்சாயத்து யூனியன் பள்ளி ஆசிரியர்களை மாற்றுவதற்கு அட்ஹாக் கமிட்டி போன்று ஒரு ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருப்பதுபோல இந்த ஆசிரியர்களை மாற்றுவதற்கும் அம்மாதிரி ஒரு கமிட்டி ஏற்படுத்துவதற்கு இந்த அரசு உத்தரவிட்டால், இம்மாதிரி தவறுகள் நடக்காமல் தடுப்பதற்கு அனுசரணையாக இருக்காதா? அதைப் பற்றி அரசு உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தவறுதல் காரணங்களுக்காக ஆசிரியர்களை மாற்றவில்லை. ஆனல், 16 பேர்கள் கணவன் மனைவியாக பல்வேறு இடங்களில் இருந்த காரணத்தினல், 1966-ம் ஆண்டில் திருக்காட்டுப்பள்ளியில் நடைபெற்ற ஆசிரியர்கள் மாநாட்டில், 16 பேர்கள் கணவன் மனைவியாக இருப்பவர்களை ஒரே இடத்திற்கு மாற்றவேண்டும் என்று விண்ணப்பம் செய்து கொண்டிருந்தார்கள். அதற்கேற்றவாறு 16 பேர்களும் கணவன் மனைவி ஒரே இடத்தில் இருக்கும்படியாக மாற்றப்பட்டார்கள். மேலும் சில இடங்களில் சில புகார்களுக்கு ஆளாக்கப்பட்டவர்கள் மாற்றப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 31 ஆசிரியர்கள் அவர்களாகவே விரும்பி பல்வேறு இடங்களுக்கு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிறகு, மாற்றப்பட்டார்களே தவிர, வேறு எந்தவித தவறுதல் காரணத்திற்காக யாரையும் மாற்றவில்லை. அதற்காக தனியாக எந்தவித அமைப்புமே ஏற்படுத்தவேண்டிய அவசியமில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பொதுவாகவே, இந்த மாவட்டத்தில் இத்தகைய டிரான்ஸ்பர்ஸ் ஏராளமாக நடந்து கொண்டிருக்கின்றன என்று என்னிடத்திலே விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன. அமைச்சர் அவர்களுக்கு கலெக்டர் தகவல்

கொடுத்திருக்கிருர்கள் என்று சொன்ஞர்கள். எத்தனே பேர்கள் அப்படி மாற்றப்பட்டார்கள் என்ற தகவலேக் கொடுக்க முடியுமா ? அது மட்டுமின்றி, இப்படித் தகாத அடிப்படையில், கணவன் மனேவியுமாக இருக்கக்கூடியவர்களேப் பிரிவினே செய்து மாற்றிக் கொண்டிருப்பதால், குடும்பத்திற்கே கோளாறு ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலே எங்கு பார்த்தாலும் உண்டாகியிருக்கிறது. ஆகவே, திட்டவட்டமாக ஒரு உத்தரவு போட்டு அரசாங்கம் இம்மாதிரி டிரான்ஸ்பர்ஸைத் தடுக்க முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கணவனும், மனேவியும் ஒரே இடத்தில் இருக்க வேண்டு மென்பதற்காகத் தான் இப்படி 16 பேர்கள் மாற்றப்பட்டிருக் கிருர்கள். மேலும், ஆசிரியர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்கத் தான் மாற்றம் செய்யப்பட்டதே தவிர, வேறு தவருன முறையில், வேண்டுமென்றே அலேக்கழிக்க வேண்டுமென்ற முறையில், ஒருவரும் மாற்றப்படவில்லே. ஆகவே, அதற்காக ஒரு தனி அமைப்பு அல்லது முறை ஏற்படுத்தும் உத்தேசம் இல்லே என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பி. எஸ். மணி : ஆசிரியர்கள் மாற்றத்திற்குக் கமிட்டிகள் நியமித்து அதன் மூலம் மாற்றங்கள் செய்தால், லோகல் அட்மினிஸ்டிரேஷனில் அது கெடுதலான விளேவை ஏற் படுத்துகிறது, ஒழுங்கீனத்தை உண்டு பண்ணுகிறது. ஆகவே, இம்மாதிரி கமிட்டியை நியமித்தால் ஜில்லா அட்மிஸ்டிரேஷன் கெடும்படியான நிலேமை இருப்பதனல், நிரந்தரமாக இப்படிப் பட்ட கமிட்டியை நியமிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவிடுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இந்த மாற்றல்கள் எந்தக் கமிட்டியின் மூலமாகவும் செய்யப்படவில்லே. மாவட்ட நல அதிகாரியின் மேற்பார்வையின் கீழ், அவர்களே கேட்டதன் பேரில் இந்த மாற்றங்கள் நடைபெற்றிருக்கின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலேவர் அவர்களே, மாவட்ட ரீதியில் நலப்பள்ளிகளில், மாவட்ட அதிகாரிகள் மாற்றங்கள் செய்யும் போது, ஊழல்கள், லஞ்சப்புகார்கள் எழும்பிவிடுகின்றன. ஊராட்சி ஒன்றியங்களில் ஒரு குழு அமைத்து மாற்றங்கள் செய்யப்படுவதுபோல, மாவட்ட நலப் பள்ளிகளிலும் செய்ய என்ன சிரமம், சிக்கல் இருக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : ஊழல் கள், தவறுகள் ஏற்படும்போது, அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படும் போது, தக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தனிக் குழு அமைக்க வேண்டிய அவசியம் இல்லே.

திரு. டி. மார்டின் : மிஸ்டர் டெபுடி ஸ்பீக்கர் சார், இந்தவித மான ஆசிரியர்கள் மாற்றப்படும்போது, படித்துக் கொண்டிருக்கும் அவர்களுடைய குழந்தைகளும் பாதிக்கப்படுகிருர்கள். அரிசன வகுப்பைச் சேர்ந்தவர்கள், பின்தங்கியவர்கள், மதம் மாறியவர் களுக்கு ரெஸிடென்ஹியல் ஸ்காலர்ஷிப் போன்றவை மறுக்கப்படு கிறது என்ற கருத்து பரவலாக இருக்கிறது. அது உண்மையா ?

1968 ஆகஸ்ட் 22]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : மதிப்பிற்குரிய உறுப்பினர் இரு வேறு கேள்விகளை ஒன்றாகக் கேட்டிருக்கிறார்கள். ஒன்று, இப்படி மாற்றப்படுகிறவர்களுடைய குழந்தைகள் பாதிக்கப்படுகிறார்கள் என்பது. இரண்டாவது மதம் மாறிய கிறித்தவ மாணவர்களுக்குச் சரியான முறையில் சலுகைகள் தரப்படவில்லை என்பது. ஒரு தலைமுறை, அதாவது தந்தை ஒரு மதமும், தாய் வேறு மதமுமாக இருந்து பிறக்கிற குழந்தைகளுக்கு இப்பொழுதே அரிசனங்களுக்குக் கொடுக்கப்படும் கல்விச் சலுகைகள் தரப்படுகின்றன. மாறுதல்கள் செய்யப்படுவது அவர்களே கேட்டுக் கொண்டதன் பேரில்தான், அப்படிச் செய்யப்படுகிறது.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : அரிசன நலப் பள்ளிகளில், ஆசிரியர்கள் குறைந்தபட்சம் எவ்வளவு காலத்திற்குத்தான் பணிபுரியவேண்டும் என்று ஏதாவது விதி வைக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : முறையாக மூன்று ஆண்டு காலத்திற்கு மேல் ஒரு பள்ளியிலேயே இருக்கக் கூடாது என்று இருக்கிறது என்றாலும், அதற்கும்மேல் கூட இருக்கிறார்கள். அதை ஒட்டியும் மாறுதல்கள் செய்யப்படுகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், ஆசிரியர்களிடம் கட்டாயமாக மாறுதல் வேண்டும் என்று பஞ்சாயத்து யூனியன் சேர்மன்களும், பிரசிடெண்டுகளும் எழுதி வாங்கிக் கொண்டு, டிரான்ஸ்பர் செய்ய வழி செய்து விடுகிறார்கள். அதனால், ஆசிரியர்கள் அவதிக்கு உள்ளாகிறார்கள். அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மூலக் கேள்வி அரிசன நலப்பள்ளி ஆசிரியர்களைப் பற்றியது.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்படிப்பட்ட புகார் எதுவும் இல்லை.

திரு. நா. காசிராமன் : இந்த மாதிரி அவசியத்தை முன்னிட்டு அரிசன நலப் பள்ளி ஆசிரியர்கள் மாற்றப்படும்போது, அவர்களுடைய குழந்தைகள் ஒரு பள்ளியிலிருந்து வேறு பள்ளிக்குப் போக வேண்டியிருப்பதால், அந்தப் பள்ளியில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை. அப்படி மாற்றப்படும் ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்குக் கட்டாயமாக, டர்ம் டேஸ் பார்க்காமல், அனுமதி கொடுக்க உத்தரவு போடப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுதெல்லாம் பல வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.